தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# சுற்றுச்சூழல் தின விழிப்புணர்வு 'சைக்ளோத்தான்'

**கோவை, ஜூன் 9–**

உலக சுற்றுசூழல் தினத்தை முன்னிட்டு, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில், (ஐ.எப்.ஜி.டி.பி.,) பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தன.

முதல் நிகழ்ச்சியாக, இயற்கை குறித்த விழிப்புணர்வு பாடல் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்துக்காக வெளியிடப்பட்டது.

தொடர்ந்து, ஐ.எப்.ஜி.டி.பி., ன் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில், சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு, பிளாஸ்டிக் மாசுபாட்டை முறியடிப்பதை கருபொருளாக கொண்டு, விழிப்புணர்வு சைக்கிள் பேரணி(சைக்ளோத்தான்) நடந்தது.

'பிளாஸ்டிக் மாசுபாட்டை வெல்லுங்கள்' என்ற பெயரில், பொது மக்களுக்கு விழிப்புணர்வு மொபைல் புகைப்படப் போட்டியும் நடந்தது.

'பிளாஸ்டிக் மாசுபாட்டிற்கான தீர்வுகள்' எனும் விழிப்புணர்வு சுவரொட்டியை, ஐ.எப்.ஜி.டி.பி., இயக்குனர் குஞ்சிக்கண்ணன் வெளியிட்டார்.

கோவை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு, சுவரொட்டி நகல் வழங்கப்பட்டது.

வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசுகள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

41. News in Dinamalar, Coimbatore, 09.06.2023, Observance of World Environment Day 2023 by ICFRE-IFGTB EIACP.